மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அப்போதைக்கப் போது சவுகரியத்திற்கேற்றபடி செய்யப்படுகிறது. இன்டென்ட் மூலமும் வாங்குகிறார்கள், வன இலாகாவில் ஏலமும் எடுக்கிறார்கள்.

*Housing Schemes.*

* 399 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Housing Board has prepared housing schemes for 1973–74 for each district in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அவை முன் ஓர் அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : மொத்தம் எத்தனை வருஷங்களில் இந்தத் திட்டம் பூர்த்தியாகும் ? மத்திய சர்க்கார் பங்கு என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இப்போது இதற்கு மத்திய சர்க்கார் பங்கு ஒன்றும் அதிகமாக இல்லை. தொகை ஏராளமாகச் செலவாகிறது. பல நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றன. 1973-74ம் ஆண்டில் அரசு 287.89 லட்சம் ரூபாய் அளித்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் ஒரு கோடி ரூபாய் டிபென்சர் மூலமாக பொதுமக்களிடத்தில் இருந்து பெற்றிருக்கிறோம். ஒரு கோடி 10 லட்சம் வரை அதிகமாக வசூலாயிருக்கிறது. அதையும் வைத்துக் கொண்டு இந்த வேலைகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம். சில வேலைகளுக்கு நில ஆர்ஜிதம் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. அ. ஆறுமுகம் : எடப்பாடி தொகுதி நெசவாளர்கள் மிகுந்த தொகுதி. அங்கு இந்தத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று பல முறை கேட்டும் அதற்கான மனு அனுப்பப்பட்டும் நாளது வரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்கு துரிதமாக ஒரு திட்டத்தை நிறைவேற்றி அந்த நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நெசவாளர்களுக்காகப் பல இடங்களில் வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு பகுதியாக வீடுகள் கட்டுவது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. திருச்சி, மதுரை, சேலம் போன்ற பெருநகரங்களில் நெசவாளர்களுக்கான நிலங்கள் ஆர்ஜிதமாகிக் கொண்டிருக்கின்றன. அவையெல்லாம் முடிந்தவுடன் எடப்பாடி எடுத்துக் கொள்ளப்படும்.

---

@456-ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 மார்ச் 20

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : விவர அறிக்கையின் 21ம் பக்கத்தில் லோ இன்கம் குருப் ஹவுஸ்ஸ், கோணம், நாகர்கோயிலில் 64 வீடுகள் என்றும், காஸ்ட் 8.60 லட்சம் என்று விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அதிலே எத்தனை வீடுகள் மூடிந்திருக்கின்றன ? எத்தனை வீடுகளில் ஆட்கள் ஆக்குபை செய்திருக்கிருர்கள் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அந்த விவரக் குறிப்புகள் தற்போது இல்லை. இந்த வீடுகளைத் தற்போது கட்டிக் கொண்டிருக் கிருர்கள். இந்தக் காலனிக்குச் சமீபத்தில் போயிருந்தேன். வேலைகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறன.

திரு. ஜே. ஜேம்ஸ் : எல்லா மாவட்டங்களுக்கும் நிறைய ஐடம்ஸ் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இதுவரை ஒரே ஒரு திட்டந் தான் காணப்படுகின்றது. இவ்வளவு குறைவாக அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கன்னியாகுமரி மாவட்டம் கடை சியில் இருப்பதால் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகக் கருதத் தேவையில்லை. அங்கு நிலத்தின் விலை அதிகமாக இருக்கிறது. மதுரையில் தனியாக ஒரு யூனிட் போட்டு தென்பிராந்தியங்கள்—திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் அதிகமான வீடுகள் கட்ட வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு, மூன்று ஆண்டு காலமாக திருநெல்வேலி மாவட்டத்தில் அதிகமான வேலைகள் தொடங்கப் பட்டிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் அது பரவும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* 400 வினு—திரு. கே. ரங்கனுதன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

1973-74ம் ஆண்டில், வீட்டுவசதி வாரியம் கோவை நகரில் எந்தெந்த இடங்களில் புதிய குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : 1973-74ம் ஆண்டில் வீட்டு வசதி வாரியம் கோவை நகரில் பீளமேடு, சிராநாயக்கன்பாளையம், கோவை புதூர், ரேஸ்கோர்ஸ் கௌண்டம் பாளையம், தெற்கு பேரூர் சாலை, வடக்கு பேரூர் சாலை, ரெட்பீல்டு, ஒண்டிபுதூர், ஆர். எஸ். புரம், டாட்டாபாத், சாயிபாபா காலனி, பிருந்தாவன் நகர் காலனி ஆகிய இடங்களில் புதிய குடியிருப்புக்களை உருவாக்கியுள்ளது.

திரு. கோவை செழியன் : ஹவுசிங் போர்டு இடம் ஒதுக்குகிருர்கள், விலை நிர்ணயம் செய்கருாகள. அந்த நிலச் சொந்தக்காரர்கள் கோர்ட் டுக்குப் போய் அதிக விலை கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புக் கூறப்பட்டால் ஹவுசிங் போர்டு மூலம் நிலம் ஒதுக்கப்பட்டவர்கள் கொடுக்க வேண்டு மென்று அக்ரிமெண்டில் இருக்கிறது. எற்கனவே கட்டிய தொகைக்குக் கூட டிபார்ட்மெண்டில் ஒழுங்காகக் கணக்கு வைக்காமல் திருப்பித் திருப்பிக் கேட்கிருர்கள். நானே நிலைமையைச் சொல்லி 50 முறைக்கு மேல் மந்திரியிடம் சொல்லிச் சொல்லி சலித்துவிட்டேன்.

1975 மார்ச் 20]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கனம் உறுப்பினரைப் பொறுத்த வரை சிறு பிரச்சினை. வீட்டு வசதி வாரியத்திற்கு எவ்வளவு கட்ட வேண்டுமோ அதை முழுவதும் கட்டாமல் விட்டு விட்டார்கள். அதற்கு வட்டிபோட வேண்டுமென்று முறையில் அதையெல்லாம் சேர்த்துக் கட்ட வேண்டிய நிலை. வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரை கணக்கு எல்லாம் அனுப்பச் சொல்லியிருக்கிறேன். கணக்கைப் பார்த்து முழுத் தொகையையும் செலுத்தி விட்டால் நிலம் உங்களுக்குச் சொந்தமாகிவிடும். எந்தப் பிரச்சினையும் அதிலே இல்லை.

திரு. நா. வீராசாமி : விவர அறிக்கையில், அறிஞர் அண்ணா நகரில் 314 வீடுகள் மிடில் இன்கம் குரூப்புக்காகக் கட்டித்தரப்பட இருக்கிறது என்று தரப்பட்டிருக்கிறது. அப்படிக் கட்டித்தரப்படுகிற வீடுகளுக்கு ஹவுசிங் போர்டு கொடுத்திருக்கிற 1—15 என்று தந்திருக்கிற பிளானில்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அந்த பிளானில்தான் கட்டிக் கொடுக்க முடியும் என்று வற்புறுத்துவது தவறு. தங்களுடைய விருப்பத்திற்கேற்றவாறு கட்டுவதற்கு.............................................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் மாநிலத்தில் பேசுங்கள். இது சம்மந்தமாகக் கேள்வியை மட்டும் போடுங்கள்.

திரு. நா. வீராசாமி : அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது ஹவுசிங் போர்டு பிளான் அல்லாமல் அவரவர்கள் விருப்பத்தின்படி கட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நிலத்தை வாங்கி வீடு கட்டிக் கொள்பவர்கள் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்கேற்றபடி கட்டிக் கொள்ளலாம், எங்களைக் கட்டித் தரவேண்டுமென்று சொல்லுகிறவர்கள் கொடுக்கப்பட்டிருக்கும் பிளானில் எதையாவது ஒன்றின்படிதான் கட்ட முடியும். 20,000 வீடுகள், 30,000 வீடுகள் என்று மொத்தமாகக் கட்டும்பொழுது ஒவ்வொருவர் விருப்பப்படியும் கட்ட வேண்மென்றால்—ஒருவர் முற்றம் வேண்டுமென்பார் ; ஒருவர் போர்டிகோ வேண்டுமென்பார்—நடைமுறையில் முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் : வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டுவதற்கு சில இடங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எந்த அடிப்படையில் அது தேர்ந்தெடுக்கப்படுகிறது? இரண்டாந்தர முனிசிபாலிட்டி பகுதிகளில்கூட, கிருஷ்ணகிரி முனிசிபாலிடி ஏரியாவைக்கூடத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால் வாணியம்பாடியில், பெரு தொழிற்சாலை நகர், ஒரு வீடு கூடக் கட்டப்படவில்லை. அதுபற்றிக் கவனம் செலுத்தப்படாததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வேலூரில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன ; திருப்பத்தூரில் கட்டப்படுகின்றன. நடுவில் இருக்கும் வாணியம்பாடி லத்தீப் காரணமாக விடப்பட்டிருக்கிறதோ என்னவோ? நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது நகராட்சிகளும் மாநகராட்சிகளும்